குறள் வெண்பா நூல். ச

ஏகசந்தக்கிராகி

என்னும் காரணப்பெயர் பெற்ற

பாகை அழகப்பன்

காவை. வடமலையப்ப பிள்ளையன் பேரில் பாடிய

வடமலை வெண்பா

முன்னுரை

திருக்குறள் வெண்பா நூல்கள் பலவற்றுள் ஒன்ருகிய வடமலே வெண்பா என்னும் இந்நூல் திருநெல் வேலியில் திருமலே நாயக்கருடைய காரியத் தலேவராக அலுவல் பார்த்துக்கொண்டிருந்த காவை வடமலேயப்ப பிள்ளேயன் என்பவர்மீது பாடப்பெற்றது. வடமலேயப்ப பிள்ளேயனுடைய வரலாறு பலவாறு கூறப்படுகிறது; இவர் தமிழறிஞர்களிடம் இலக்கண இலக்கியங்களேக் கற்றுச் சிறந்த புலமைத் திறமடைந்து விளங்கினுர். தாமும் செய் யுள் இயற்றக் கூடிய ஆற்றல் பெற்றுத் திகழ்ந்த இவர் திருநீடூர்த் தலபுராணம், மச்சபுராணம் என்னுஞ் செய்யுள் நூல்களே இயற்றியுள்ளார். இவர் இந்நூல்களேக் கி. பி. 1706, 1707ஆம் ஆண்டுகளில் பாடி அரங்கேற்றினுர் என்று தெரிகிறது. அப்புராணங்களிரண்டுஞ் சொற்சுவை யிலும் பொருட் சுவையிலும் சிறந்து திகழ்கின்றன.

வடமலேயப்பர் தமிழறிஞராக இருந்தமையின் புலவர் களேப் போற்றிக்காப்பதில் தலேமை பெற்று விளங்கினுர். புலவர்கள் பலர் வடமலேயப்பரை எப்பொழுதுஞ் சூழ்ந் திருந்தனர். பிறவிடங்களில் இருந்த புலவர்கள் பலர் இவர் மீது தனிப் பாடல்கள் இயற்றிக் கொண்டு வந்து பரிசு பெற்றுச் சென்றனர். நாராயண தீட்சிதர் என்பவரும் வேறு சிலரும் கீழ் அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். செய்தியை உணர்ந்த வடமலேயப்பர் விரைந்து சென்று அவர்களேச் சிறை நீக்கிப் போற்றிய துடன் அறிஞர்களேத் துன்புறுத்திய அதிகாரியை நன்கு ஒறுத்து நாட்டை விட்டும் விரட்டினுர்.

இவர் காலத்தில் மேலே நாட்டு மிலேச்சர்கள் இந்நாட் டில் சமய வெறி கொண்டு அடாத செயல்கள் பல புரிந்த

னர். திருச்செந்தூர்க் கோயிலுக்குட் புகுந்து அணிகலன் கள் நிதிகள் முதலியவைகளைக் கவர்ந்ததன்றி உலோகத் தாலாகிய ஆறுமுகப் பெருமானுடைய திருவுருவத்தையுந் தூக்கிக் கொண்டு கடல் வழியாகச் சென்றனர். அப் பொழுது ஆறுமுகப் பெருமானுடைய ஆரருளால் சுழல் காற்றுண்டாகி மிலேச்சர்களுடைய படகைக் கவிழ்க்கத் தொடங்கியது. இந்நிகழ்ச்சி தெய்வத்தாலாயதென் றுணர்ந்த அவர்கள் திருவுருவத்தைக் கடலில் தூக்கி யெறிந்து விட்டுச் சென்றனர். முருகக் கடவுள் வடமலையப் பர் கனவில்தோன்றித் தாம் கடலில் கிடக்கும் இடத்தை யும் அறிதற்கு வழியையுங் குறிப்பிட்டு மறைந்தருளினர். வடமலையப்பர் உறுதிச் சுற்றத்தினரோடு கடலிற் சென்று திருவுருவத்தை யெடுத்து வந்து கோயிலில் அமைத்துக் குடமுழுக்குச் செய்தார். இச்செய்திகள் சிறப்புப்பாயிரப் பாட்டாலும் அறியப்படும்.

இவர் காலத்தில் பாகை அழகப்பன் என்னும் புலவர் இவரால் ஆதரிக்கப்பட்டு இவருடைய சார்பில் வசித்திருந் தார். அவர் பெரும் புலவர். ஒருவர் ஒரு முறை கூறும் பாடலை மனத்தில் பற்றி உடனே அதனைத் திரும்பச் சொல்லும் புதுமை மிக்க நினைவாற்றலைப் பெற்றிருந்தார். இவ்வாறு ஆற்றலமையப் பெற்றவர்கள் 'ஏகசந்தக் கிராகி" என்று கூறப் பெறுவர். இதனுல் பாகை அழகப்பனும் ஏகசந்தக்கிராகி என்று வழங்கப்பட்டார். இதனுல் இவருடைய அழகப்பன் என்னும் பெயர் நாளடைவில் மறைந்து போய் ஏகசந்தக்கிராகி என்னும் காரணப் பெயரே நிலைபெறுவதாயிற்று. இவர் வடமலையப்ப பிள்ளை யன்மீது ஏதேனும் நூல் இயற்ற வேண்டுமென்று எண்ணினர். அந்நூல் விரைவில் மறைந் தொழியாதபடி நிலைபெறுவதற்கான வழியையுந் தேடினர். திருக்குற ளோடிணைத்துச் செய்தால் நூல்மறைந்தொழியாமலிருக்கு மென்று துணிந்து திருக்குறளின் ஒவ்வோர் அதிகாரத்தி

லிருந்தும் ஒவ்வொரு பாடலை யெடுத்துக் கதையமைத்து வடமலையப்ப பிள்ளையனை முன்னிலைப்படுத்தி வடமலை வெண்பா என்னும் இந்நூலைச் செய்து முடித்தார். அறத்துப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் பாடல்களைத் தேர்ந்தெடுத்து நூலை முடித்தாரேயன்றிக் காமத்துப் பாலுக்குச் செய்ய முயன்றதாகத் தெரியவில்லை. மேற்கோளாக எடுக்கப்பெற்ற கதைகள் எல்லாராலும் நன்கு அறியப்பட்ட கதைகளே. நூல் விரியாமலிருக்கும் பொருட்டுக் கதைப்பெயரும் அரும்பதவுரையுமட்டுங் கூறப்பட்டன. கதைகளைப் படிக்க விரும்புவோர் மேற்கோள் விளக்கக் கதையகரவரிசை நூலில் இருந்து பெரும் பாலான கதைகளைத் தெரிந்து கொள்ளலாம். காமத்துப்பால் விடப்பட்டமையின் இந்நூலின் பாடல்கள் நூற்றியெட்டோடு முடிகிறது.

சு. அ. இராமசாமிப் புலவர்.

உ

முருகன் துணை

சிறப்புப்பாயிரம்

[திருச்செந்தூர் புதுத்தெரு சுப்பையயரவர்கள்
மகனார் குஞ்சி அய்யா பாரதி அவர்கள் இயற்றியது.]

கலிவெண்பா

சீர்பெருகுங் கொற்கைத் திருநகரில் விண்ணதியாம்
நீர்பெருகத் தாங்குமுடி நின்மலனால்—ஏர்பெருக
வந்துதித்த மும்மரபின் மன்னவருண் மீனவனால்
பந்தமுறுஞ் சிறையிற் பட்டுழலும்—அந்தரஞ்சேர்
காரையஞ்ச லென்றுமுனங் காத்த குலத்துதித்தான்
பாரையஞ்ச லென்றாண்ட பாக்கியவான்—தாரகமாம்
மாரிமங்க லத்தில்வரு மாதங்தோ றும்பொழியும்
மாரிமங்க லத்தோர் மரபுடையான்—நேரலரைச்
சாய்த்து மகுடந் தரித்தகரு நாடகத்தின்
வாய்த்தகொற்ற வேந்தருக்கு மந்திரியாய்—ஏத்துமொரு
தென்னாட்டு நெல்வேலிச் சீமையெல்லாம் ஓர்குடைக்குள்
சொன்னாட்டி யாண்ட துரந்தரிகன்—எந்நாட்டு
மண்டலிக ரும்பணியும் வார்கழலான் யாசகர்க்குக்
கொண்டலென நல்குங் கொடையினான்—எண்டிசையும்
சென்று விசயஞ் செலுத்தி யெதிர்த்தாரைப்
பொன்றுவித்த வீரப் புகழினான்—என்றும்
அழியாச் சிவாலயமும் அந்தணர்கட் கில்லும்
எழிலாய்ப்ர திட்டைசெய்த ஏந்தல்—அழகுடைய
பன்னிரண்டு கையானைப் பாவை வள்ளி தெய்வானை
மின்னிரண்டு சேர்கருணை மேகத்தை—என்னிரண்டு
பாவவினை நீக்கும் பரனை மறவாத
பாவகத்தான் நாவலர்சொல் பாவகத்தான்—கோவை
வடமலையப் பன்மாதர் மையல்கொளுங் காவை
வடமலை யப்ப மகிபன்—திடமுறுநாள்

சங்கினங்க ளீன்ற தவள மணியொளியால்
கங்கு லையும்பகல்போல் காட்டிடவே—துங்கமுறும்
சிந்தூ ரலைவாய்ச் செறிவளங்கொண் டோங்குதிருச்
செந்தூரில் வாழ்ந்தருளுஞ் சிற்பரனுங்—கொந்தூர்தார்
ஆறிரண்டு தோளான் அழகு திருவுருவை
மாறிரண்டார்க் கெட்டா வடிவையெடுத்—தேறிவரும்
நாவாயி னேத்திவைத்து நண்ணு மவர்பதிக்குப்
போவார் மிலேச்ச ரதுபோழ்தின்-யாவுமாம்
எங்கும் நிறைந்திருக்கும் எந்தை யருளாலோர்
பொங்குமழை காற்றும் புயலுமாய்—அங்குவரக்
கல்லார்கள் யாருங் கடுக மயங்கியிந்தப்
பொல்லா வுருவின் புணர்ப்பென்றே—எல்லாரும்
தூக்கி யெடுத்துத் தொடுகடலில் ஆழ்த்திவிட்டு
நீக்கி நடந்தார் நிமிடமதில்—காக்குமென(து)
அன்னையில்லாப் பிள்ளையைப்போல் ஆதரவி லாதுசிந்து
நன்னக ருள்ளார் நலியுநாள்—உன்னில்
கருவுருவைக் காணவொட்டாக் காரணன்றன் ஞானத்
திருவுருவைச் செய்து சிறப்பாய்—உரிமையுடன்
வேறுபிர திரட்டைசெய வேண்டுமென எண்ணியவன்
மீறிவரு நித்திரைசெய் வேளையிலே—வேறிகழும்
கையானும் அங்கண் கனவினில் வந்துரைக்கும்
பொய்யாத கீர்த்திப் புரவலா—மெய்யாநம்
சன்னிதிக்கு முன்பாஞ் சமுத்திரத்தி லோர்புடையின்
நன்னிதிபோல் அங்குவந்து நாடினல்—உன்னதத்தில்
வல்ல கருடனென்று வட்டமிடு நேரான
எல்லைதனில் யாமும் இருக்கின்றேம்—ஒல்லையினில்
வேண்டுஞ் சனங்களொடு மேவி லெழுந்தருளி
ஈண்டு வருவோ மெனவியம்பி—ஆண்டகையும்
போயினன் பூமி புரந்தரனு மெவ்வுயிர்க்கும்
தாயனன் நித்திரையுந் தான்விழித்துத்—சேயருளைப்
பாடினன் பாடிப் பரவிப் பலமுறைகொண்
டாடினன் மெய்ப்புளக மாயினன்—தேடரிய
நல்ல சுபமுதர்த்த நாளை உதயமதில்
செல்லவென்றே யார்க்குந் தெரிவித்துத்—தொல்லைமறை

தேறி மகஞ்செய் திரிசுதந்த ரத்தரெனுங்
கூறு மறையோர் குழாநெருங்க—மாறிலாத்
தொண்டர்களும் ஆகமநூல் சொல்லுமுதற் சைவர்களும்
தண்டுதலின் றிப்பிறருந் தற்சூழ—ஒண்டொடிக்கை
மின்னூர் பரத விதத்தினிருத் தம்புரிய
நன்னு வலர்கவிகள் நன்கிசைப்பக்—கொன்னூரும்
பேரிசின்னங் காளம் பெருகுமுழ வந்திமிலை
மூரிநடு மேளம் முழங்கிவர—வாரிதியில்
சென்றுபல சோங்கினெடுஞ் செவ்வே ளுரைத்தபடி
ஒன்றுங் குறிகளெல்லாம் ஒத்திருக்க—நின்றவரை
நீரின் நிலையறிந்து நேடுமின் வல்லையென்றான்
ஆரு மிறங்கின ரக்கணமே—நேரிலான்
தன்னுருவோ டங்கண் சலதியின் மீதெழுந்து
மின்னுருப்போல் தோன்ற வியப்படைந்து—அந்நிலையே
கப்பலி னேற்றிக் கழிப்புக் கடலினெடும்
அப்புக் கடலின் அருகாக—இப்புவிக்குள்
சென்னி மணியாய்ச் சிறந்தசெந்தில் ஆலயத்தில்
மன்னியசிங் காதனமேல் வைத்தருளி—நன்மைதரும்
ஆகமத்தால் கும்ப அபிடே கமுநடத்தி
வாகைபெறச் செந்தூரை வாழ்வித்த—மாகனவான்
மன்னுதிரு வள்ளுவர்செய் மாமறையே கொண்டவன்மேல்
அன்ன குறளமைத்தே ஆதரவாய்ப்—பன்னுகிற
எண்பா வினங்களையும் ஏகசந்தக் ராகிசொல்லும்
வெண்பாவை இந்நாள் வெளிப்படையாய்ப்—பண்பாகச்
சீருந் தளையுந் திருத்திக் கரலிகிதம்
சாரும் பிழையுந் தவிர்த்தளித்தான்—ஆரெனிலோ
தந்திரியா மேந்திநூல் சாற்றுங் குறைதவிர்த்துக்
கந்திருவர் வந்திசைக்குங் காட்சிபோல்—முந்திநிற்கும்
கல்லு முருகக் கனிந்தவிசைப் பாட்டெனுந்தேன்
எல்லார் செவிக்கும் இனிதளிப்போன்—மெல்லிதழிப்
பூவாரும் வேணுவனப் புங்கவர்தஞ் சந்நிதியில்
தேவாரம் ஓதிவரும் செவ்வியோன்—நாவாரக்
கற்றுமிறு மாந்த கவிஞரையெ லாஞ்செயித்து
வெற்றிக் கொடிநிறுவு மேன்மையோன்—முற்றுநிலா

எண்ணுங் கலைகள் இலக்கணத்தோ டாகமங்கள்
நண்ணும் பலநூலும் நாடியதன்—உண்ணிறைந்த
சொற்பொருளும் அப்பொருள்கள் சொல்லு முடிவான
மெய்ப்பொருளுங் கண்ட விவேகத்தான்—ஒப்பில்வெள்ளை
ஏறுடையான் அன்பருக்குள் எண்ண வருமுதன்மைப்
பேறுடையான் சைவதவப் பீடுடையான்—கூறுகின்ற
சாலிவா டீசுரனும் சற்குணத்தான் பின்னதனை
ஏலவே யாரும் எளிதோதச்—சீலமிகும்
இப்பாடல் கொண்டோன் இணையில் வழிமரபில்
தப்பா தவதரித்த தாட்டீகன்—செப்பரிய
கொங்கரா யக்கோத்ர கோமா னெனவுதித்த
சங்கரநா ராயணவேள் தந்தவனும்—இங்கிலீஷ்
மன்னரெல்லா மெச்சு மதியுடையான் வாக்கதனால்
சொன்னசொல் மாருச் சுகுணவான்—பொன்னுலகில்
விண்டருவைப் போற்கொடுக்கும் வீறுகொ டைக்கரத்தான்
அண்டலரை வெற்றிகொளும் ஆண்மையான்—அண்டி
னரைக்-
காக்கு மனதுடையான் கற்றவர்க்கு ளென்னிடத்தில்
தேக்குங் கருணை தெவிட்டாதோன்—ஆக்கமுறும்
சோமனைப் போன்ற தொகையினிதி யானழியாக்
காமனெனவிளங்குங் காட்சியான்—பூமருவும்
அந்தணனை நீங்கா அரிய கலைவாணி
வந்துகுடி கொண்ட கல்வி வாய்மையான்—செந்திருவாழ்
ஆகத்தா னென்ன அலகில்புவ னம்புரக்கும்
யோகத்தான் மந்திரிபோல் யூகத்தான்—மாகமுதல்
எங்கும் புகழ்போய் எளிதிற் படர்ந்தேறப்
பொங்குமறஞ் செய்யும் புனிதவான்—சங்கையிலா
வள்ள லெனவே வருசுப்ர மண்யதுரை
எள்ளலின்றி வேண்டு பொருளீந்து—தெள்ளி
எழுதா எழுத்தில் இயற்றி இசைபெற்றுன்
வழிவழியாய் வாழி யவன்.

சிறப்புப்பாயிரம் முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்

வடமலை வெண்பா

காப்பு

வடமலைவெண் பாச்சொலத்தென் மாமலைச்சொற் கத்து
வடமலைவெண் பாற்கடன்மின் வாழும் - இடமான
சந்திக் கடத்தமருஞ் சந்திக் கடகரிதாட்
சந்தித்துச் சிந்தித்துத் தாழ்.

நாமகள்

கட்டளைக் கலித்துறை

சீரோங் குலகை மனுவினைப் போலச் சிறந்தளித்த
பேரோங்கு காவை வடமலை யப்பநற் பிள்ளையன்மேல்
பாரோங்கு வள்ளுவர் பாவுடன் வெண்கவி பாடுதற்குத்
தாரோங்கு பூங்குழல் வாணியென் னாவினில் தங்கினளே.

நூல்

க. அறத்துப் பால்

கடவுள் வாழ்த்து

பூமகனை யெல்லாப் புவனத் தொடும்படைத்தோன்
மாமகள்கோன் காவை வடமலையே—யாமே
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு 1

வான்சிறப்பு

காதி புதல்வன் களவுகொண்ட காலத்தே
மாதவமார் செய்வார் வடமலையே - நீதியால்
தானந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 2

நீத்தார் பெருமை

மூண்டு வெகுளி கபில முனிவிழிப்ப
மாண்டார் சகரர் வடமலையே—நீண்ட
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது. 3

அறன்வலியுறுத்தல்

ஏற்க வறத்தை யியற்றி எதிர்கூற்றை
மார்க்கண்டன் வென்றான் வடமலையே—மேற்கருமம்
அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 4

இல்லறம்

இல்வாழ்க்கை

கூறென்று கொண்டுமனு வைந்துங் குடிகட்கு
மாறா தளித்தான் வடமலையே—தேறினோம்
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை. 5

வாழ்க்கைத் துணைநலம்

கண்ணகி யேவல் புரிந்தான் கனற்கடவுள்
மண்ணுலகில் வந்து வடமலையே—எண்ணுங்கால்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 6

புதல்வரைப் பெறுதல்

இந்திரனோ டாசனத்துப் பாண்டு இனிதிருப்ப
மைந்தன றஞ் செய்தான் வடமலையே—வந்துதவும்
தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையால் வரும். 7

அன்புடைமை

தாமுயிர் வாழ இரந்தோர்க்குத் தன்னென்பை
மாமுனி யீந்தான் வடமலையே—யாமறிந்தோம்
அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 8

விருந்தோம்பல்

நெல்லியமு தவ்வைக் களித்துநெடு வேலதியன்
மல்குபுகழ் கொண்டான் வடமலையே—இல்லின்
விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 9

இனியவை கூறல்

கோலேந்து மாயன்பா லின்மொழிகள் கூறியின்ப
மாலைவிற்பொன் பெற்றான் வடமலையே—சாலச்
சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். 10

செய்ந்நன்றி யறிதல்

நேசத் தணின்மணலை நின்றுதிர்ப்ப வான்கொடுத்தான்
வாசத்து மாயான் வடமலையே—நேசத் (து)
உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 11

நடுவு நிலைமை

தன்னுடைய தம்பியுடல் தான்பிளப்பத் தான்வழக்கோர்
மன்ன னுரைத்தான் வடமலையே—இந்நிலத்தில்
கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 12

அடக்கமுடைமை

வாயா லிகழ்ந்துரைத்து மாண்டான் சிசுபாலன்
மாயோனைக் காவை வடமலையே—ஆயுங்கால்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 13

ஒழுக்கமுடைமை

வேளாள னரதனே யானுன் விறற்றருமன்
வாள்விதுரனுனன் வடமலையே—கேளாய்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 14

பிறனில் விழையாமை

கோதமனால் இந்திரனூர் பெற்றூர் கொடுஞ்சாபம்
மாதை விரும்பி வடமலையே—ஓதி
எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். 15

பொறையுடைமை

தீர்த்தன் விதுரன் பணிக்கொடியோன் செப்பியதி
வார்த்தை பொறுத்தான் வடமலையே—பார்த்தே
ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 16

அழுக்காருமை

வெள்ளி விழியிழந்தான் வேண்டாமென் றீவோனை
வள்ளலே காவை வடமலையே—உள்ளத்(து)
அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னூர்
வழுக்கியுங் கேடீன் பது. 17

வெஃகாமை

குண்டலத்தை வெஃகிக் குலத்தையழல் வாய்வீழ்த்த
மண்டலியைப் பாராய் வடமலையே—தண்டி
நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். 18

புறங்கூறாமை

கூற்றமற நூலுரைத்தோன் கொள்கைபுறங் கூறாத
மாற்றத் தறிந்தான் வடமலையே—தேற்றத்(து)
அறஞ்சொல்லு நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். 19

பயனில சொல்லாமை

சாபாலி தன்னைத் தயரதரா மன்னிகழ்ந்தான்
மாபா ரறிய வடமலையே—நீபாராய்
பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும். 20

தீவினையச்சம்

மாய்ந்தான் பிறர்மாள மாயாத் தவம்புரிந்து
வாய்ந்தசிந்து நாடன் வடமலையே—ஆய்ந்தோர்
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. 21

ஒப்புரவறிதல்

இல்லாமை கூறு தெழுமரவிற் கைவிட்டான்
வல்லைதொண்டை நாடன் வடமலையே—நல்லதன்றோ
ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 22

ஈகை

ஓங்கு பசியொழிந்தான் தேவன் ஒளிர்கடகம்
வாங்க முனிவன் வடமலையே—ஆங்கதுகேள்
பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டல் அரிது. 23

புகழ்

பாரி வனமடைந்தான் மெய்க்கவசம் பண்டளித்தான்
மாரிநிகர் கன்னன் வடமலையே—சீரிதன்றோ?
நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. 24

அருளுடைமை

துறவறவியல்

நாயைச் சுமந்தமரர் நாடுடல மெய்தினான்
வாய்மைத் தருமன் வடமலையே—தாயொத்(து)
அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல். 25

புலால் மறுத்தல்

வேள்வித் தொழில்விடுத்துக் கொல்லாமை மேற்கொண்டான்
வாள்நந்தி தேவன் வடமலையே—சூளின்
அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று 26

தவம்

முச்சங்கை வான்புகுத்தி யைமீன் முறைதவிர்த்து
வைச்சான் முனிவன் வடமலையே—நிச்சயமாம்
ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும், 27

கூடாவொழுக்கம்

சாபமுற்றான் கங்கை தடமுலையை நோக்குதலான்
மாபிடக்கு மன்னன் வடமலையே—தாபதர்க்கு
வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். 28

கள்ளாமை

தேனுக் களவுக் குடன்பட்ட சீர்வசுக்கள்
மானிட ரானார் வடமலையே—ஞானிகட்(கு)
உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். 29

வாய்மை

ஆறலைப்போர்க் குண்மையுரைத் தாழ்நரகத்தேபுகுந்தான்
மாறாத் தவத்தோன் வடமலையே!—தேறினோந்
தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 30

வெகுளாமை

தானுடைய கோபத்தால் சக்கரத்தால் துன்பமுற்ருன்
மானமுனி காவை வடமலையே —ஆனதனுல்
செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கா லென். 31

இன்னு செய்யாமை

கந்திருவ னவர்பாற் சென்ற கவுரவனே
வந்து பிணித்தான் வடமலையே—முந்திப்
பிறர்க்கின்னு முற்பகற் செய்யில் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும். 32

கொல்லாமை

தாமிறந்தார் சாபமொழி சாற்ருது தண்டகத்து
மாமுனிவர் காவை வடமலையே—ஏமஞ்சால்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 33

நிலையாமை

அந்தமுற்று வீழ்ந்தான் அயிராணி தோள்புணர
வந்த நகுடன் வடமலையே—சிந்தித் (து)
ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல, 34

துறவு

ஞான முனிபரதன் நற்கலையாய் வந்துதித்தான்
மானை வளர்த்து வடமலையே—ஆனுல்
இயல்பாகு நோன்பிற்கொன் றின்மைஉடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 35

மெய்யுணர்தல்

தண்டுசுற்ற வான்போன்ற சங்கர மாமுனிக்கு
மண்டபங்கள் காவை வடமலையே—கண்டறிந்தோம்
எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 36

அவாவறுத்தல்

தந்தை யடையாத் தனிவீடு தானடைந்தான்
மைந்தன் சுகன்காண் வடமலையே—சிந்தையெழும்
ஆராவியற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும். 37

ஊழ்

வேள்வி புரிந்திறந்தான் தக்கன் விடமேறி
வாள்வீம னுய்ந்தான் வடமலையே—ஊழ்வகையால்
நல்லவை யெல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. 38

உ. பொருட்பால்

அரசியல்

இறைமாட்சி

பார்த்தன் மகவிழந்த பார்ப்பான் வெகுண்டுரைத்த
வார்த்தை பொறுத்தான் வடமலையே—காத்துச்
செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 39

கல்வி

சூரியற்கு முன்னடைந்து சொல்லுநூல் கற்றறிந்தான்
வாரி கடந்தோன் வடமலையே—நேரே
உடையார்முன் னில்லாபோல் ஏக்கற்றுங் கற்ருர்
கடையரே கல்லா தவர். 40

கல்லாமை

காண வுலகங் கவுசிகனுக் கூன்வணிகன்
ணவறஞ் சொன்னுன் வடமலையே—நீணிலத்து
றந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
னத்திலர் பாடு. 41

கேள்வி

நான்மறைதேர் சங்கர் தம்மை நல்லறங்கள் கேட்டினன்
வான்மீகி யானுன் வடமலையே—ஞானம்
எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 42

அறிவுடைமை

மிக்க வருச்சுனனுர் வேண்டும் உருவசியாள்
மைக்குழலை நீத்தார் வடமலையே—தக்கதன்றே?
சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. 43

குற்றங் கடிதல்

ஆறன் றெனக்கதவு தொட்ட கரமறுத்து
மாற னுயர்ந்தான் வடமலையே—வேறின்றித்
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு. 44

பெரியாரைத் துணைக்கோடல்

இந்திரற்குப் பாதகத்தை நீக்கி யிகலரசு
மந்திரி தந்தான் வடமலையே—சிந்தைதனில்
உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 45

சிற்றினஞ் சேராமை

கூனிமொழி கேட்டுக் கொடியவளாய்க் கைகேசி
மானிலங் கொண்டாள் வடமலையே—ஆனுல்
நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. 46

தெரிந்து செயல்வகை

விண்கொண்டான் நாகக் கொடியோன் விறற்றருமன்
மண்கொள்ள எண்ணி வடமலையே—எண்கொண்டே
ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 47

வலியறிதல்

காங்கையனைப் போரெதிர்ந்து காசிநக ரத்துடைந்தார்
வாங்குவிற்கை மன்னர் வடமலையே—தாங்கி
உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 48

காலமறிதல்

ஈசகன் செய்தபிழை கேளாது கண்டிருந்தார்
மாசிலா மன்னர் வடமலையே—நேசத்தால்
பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர். 49

இடனறிதல்

மூவேந்தர் பாரிபால் முற்றியும் வென்றிலரே
மாவேழம் ஊர்ந்து வடமலையே—தூவேற்
சிறுபடையான் செல்லிடஞ் சேரின் உறுபடையான்
ஊக்க மழிந்து விடும். 50

தெரிந்து தெளிதல்

பொற்கொல்லன் சொற்கேட்டுக் கேளிரொடும் பொன்றினன்
மற்போர் வழுதி வடமலையே—நற்குணங்கள்
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும். 51

தெரிந்து வினையாடல்

சச்சந் தனையழித்துக் கொண்டான் தனியமைச்சன்
வைச்ச வரசை வடமலையே—நிச்சம்
எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகு மாந்தர் பலர். 52

சுற்றந்தழால்

வானிழுக்கி வீழ மியாதிக்கும் வந்தளித்த
மானிலத்தில் சுற்றம் வடமலையே—மேனிலைமை
பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 53

பொச்சாவாமை

ஆண்மறந்து நல்கி அடவியிடை யோங்கியாய்
மாணிபன் வந்தான் வடமலையே—மாணிலத்து
அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு 54

செங்கோன்மை

சம்புகனை வெட்டித் தனிக்கோல் வளைவெடுத்தான்
வம்பார் துழாயன் வடமலையே—நம்பும்
குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். 55

கொடுங்கோன்மை

வித்துக் கிரட்டி விளைந்ததே வேனன்முடி
வைத்தரசு செய்ய வடமலையே—எத்துறையும்
நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும். 56

வெருவந்த செய்யாமை

பாழா யொழிந்த திராவணனுர் பண்டுபெற்ற
வாழ்நா ளனைத்தும் வடமலையே—தாழா (து)
இறைகடிய னென்றுரைக்கும் இன்னுச்சொல் வேந்தன்
உறைகடுகி யொல்லைக் கெடும். 57

கண்ணேட்டம்

பாரியைக்கொண் டோடுஞ் சயிந்தவனைப் பார்த்தருளின்
வாரி பொறுத்தான் வடமலையே—தேரின்
ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 58

ஒற்றுடல்

ஒள்ளொளியாள் சானகியை ஒற்றர்மொழி கேட்டிகழ்ந்தான்
வள்ள லிராமன் வடமலையே—கள்ளமிலா
ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். 59

ஊக்கமுடைமை

ஊக்க முடைமையால் பெற்று னுயருலகம்
வாழ்க்கைத் துருவன் வடமலையே—நீக்கமிலா
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. 60

மடியின்மை

கண்டுயிலுங் காலையிலும் வில்லொழியாக் கைவிசயன்
மண்டலத்தை வென்றான் வடமலையே—தண்டா
மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. 61

ஆள்வினையுடைமை

கூற்றுக் குரைத்தறநூல் தன்கீழ்க் குடியடிமை
மாற்றினன் சோழன் வடமலையே—ஊற்றத்தால்
ஊழையு முப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். 62

இடுக்கணழியாமை

சூழ்துயரைக் கண்டும் புரூரவாத் துன்பமின்றி
வாழுமனம் பெற்றான் வடமலையே—ஊழால்
இடுக்கண் வருங்கால் நகுக வதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 63

அங்கவியல்

அமைச்சு

யூகி யுதையணனுக் குற்றசிறை நீக்கிமண்மேல்
மாகீர்த்தி பெற்றான் வடமலையே—போகா
மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. 64

சொல்வன்மை

வில்விசயன் முன்னோனை வெட்டவெழுந் தானொழிந்தான்
மல்லடர்த்தோன் சொல்லால் வடமலையே—வல்லமையால்
கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். 65

வினைத்தூய்மை

நீதிகெடச் செய்தபொருள் நீங்கித் துயராடும்
வாதாபிக் கென்பர் வடமலையே—போதச்
சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. 66

வினைத்திட்பம்

தந்தார் பகீரதனார் முன்னோருந் தாராத
மந்தா கினியை வடமலையே—முந்தியொன்றைச்
சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல். 67

வினைசெயல்வகை

வேள்வி முடிப்பச் சராசந் தனைவீழ்த்தான்
வாள்வீமன் காவை வடமலையே—கேளாய்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 68

தூது

ஆருயிரை யெண்ணா துரைத்தா னரக்கன்பால்
மாருதிபோய்த் தூது வடமலையே—நேரே
இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்(கு)
உறுதி பயப்பதாந் தூது. 69

மன்னரைச் சேர்ந்தொழுகல்

சத்திய கீர்த்தி சுடலையிடந் தன்னரசை
வைத்துப் புரந்தான் வடமலையே—ஒத்தே
அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 70

குறிப்பறிதல்

கன்னி சகுந்தலையைக் கண்டரசன் பாரியென்றோர்
மன்னன் தெளிந்தான் வடமலையே—இன்னதென்றே
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 71

அவையறிதல்

தெள்ளுதமிழ்ச் சங்கத்தார் சீர்புகழ்ந்து பாடினார்
வள்ளுவரைக் காவை வடமலையே—ஒள்ளொளியாய்க்
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. 72

அவையஞ்சாமை

பாய்மூடி னார்முதலோர் பட்டர்பிரான் கட்டுரைமுன்
வாய்மூடி நின்றார் வடமலையே—ஆயுங்கால்
பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 73

நாடு

நான்கு திசைவயலுள் அவ்வைதொண்டை நன்னாட்டை
வான்கரும் பென்றாள் வடமலையே—நான்குதிணைத்
தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. 74

அரண்

சூழ்படையால் சாளுவர்கோன் சுற்றியுங்கை விட்டான்
வாழ்துவரை தன்னை வடமலையே—தாழாது
முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். 75

பொருள்செயல்வகை

பொங்கு தவத்தால் பொருளடைந்தான் பாண்டவன்போய்
மங்கைபங்கன் தன்பால் வடமலையே—தங்கட்கோர்
ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு. 76

படைமாட்சி

மூல பலமடிய மூரிவிற்கை யேந்தினான்
மாலொருவன் காவை வடமலையே—ஞாலத் (து)
ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். 77

படைச்செருக்கு

கையாற் பிடித்துந் தருமனுயிர் காத்துவிட்டான்
வையார்வேற் கன்னன் வடமலையே—மெய்யான
பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு. 78

நட்பு

தோழமை கொண்ட சுதன்றனாற் சீவகனும்
வாழுமுயிர் பெற்றான் வடமலையே—தாழா (து)
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு. 79

நட்பாராய்தல்

போரார் இராவணற்கு நட்பா யுயிர்போன
மாரீச னைப்பார் வடமலையே—யாரேனும்
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். 80

பழைமை

ஆற்றினான் பாரிபிழை சினக்கன் அவ்வையுடன்
மாற்றினான் பாரி வடமலையே—தோற்றத்தால்
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 81

தீநட்பு

நஞ்சளித்தான் வீமனுக்கு நாகக் கொடியோனும்
வஞ்சகத்தால் நட்பாய் வடமலையே— எஞ்சாக்
கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 82

கூடாநட்பு

கோதமனை நட்பாய்ப் பொருள்கருதிக் குற்றமுற்ருர்
மாதவத்தோர் காவை வடமலையே—சோதித் (து)
இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 83

பேதைமை

ஏலா தனசெய் தினையோன் பணைகவர்ந்தான்
வாலிநூல் கற்றும் வடமலையே—சீலங்கள்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். 84

புல்லறிவாண்மை

சாற்றுமொழி கேளா மகனைச் சகரனென்றே
மாற்றினுன் காவை வடமலையே—ஏற்றுரையை
ஏவவுஞ் செய்கலான் தான்தேருன் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். 85

இகல்

மாறுகோள் விட்டு மருத்தன் மகமழியா
வாறு புரிந்தான் வடமலையே—சீரு(து)
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். 86

பகைமாட்சி

தேவர்கோன் பாகன் வலன்முதலோ ரைச்செகுத்து
மாவலிமேற் செல்லான் வடமலையே—மேவா
வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. 87

பகைத்திறந்தெரிதல்

கொன்ருன் குழவிப் பருவத்தே கொற்றவரை
வன்ருே ளிராமன் வடமலையே—நன்றே
இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 88

உட்பகை

சல்லியன் சாரதியாய்க் கன்னன் வலிசாய்க்க
வல்லன்மொழி சொன்னான் வடமலையே—வில் ஆங்கு
வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 89

பெரியாரைப் பிழையாமை

மாதவர்க்குச் செய்துபிழை வீழ்ந்தான் வசுவென்பான்
மாதவனைச் சேர்ந்தும் வடமலையே—மாதோ
இறந்தமைந்த சார்புடையா ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். 90

பெண்வழிச் சேறல்

வந்தவளா ரென்ன மனநடுங்கி யான்மகனுன்
மைந்தன்மனை யென்றான் வடமலையே—முந்த
இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்
அமையார்தோ ளஞ்சு பவர். 91

வரைவின் மகளிர்

கோதில் பெரும்பொருள்போய்க் கோவலனார் துன்பமுற்றார்
மாதவியாற் காவை வடமலையே—காதலால்
அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும். 92

கள்ளுண்ணாமை

காணாது வெள்ளியென்பான் கள்ளோடுடனுண்டான்
மாணாக் கனைக்காண் வடமலையே—நீணிலத்துக்
கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 93

சூது

நல்லதொரு நாடிழந்து காடு நளனடைந்தான்
வல்லினாற் காவை வடமலையே—சொல்லில்
சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். 94

மருந்து

முன்னரசன் வேள்விநெய்யை முட்டா தருந்திநோய்
வன்னி யடைந்தான் வடமலையே—இன்னதென்றே
தியளவன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவின்றிப் படும். 95

ஒழிபியல்

குடிமை

வேசரிமா தங்கன் வினையால் விழுக்குடிக்கும்
மாசுசொன்ன தன்றே வடமலையே—தேசார்
நலத்தின்கண் ணாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ணையப் படும். 96

மானம்

எய்து பழிகண்டு மாய்ந்தார் எழுபதின்மர்
வையம் புகழ வடமலையே—மெய்யே
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 97

பெருமை

ஆதி முதலை வரவழைத்த அன்பினன்
மாதங்க மொன்றின் வடமலையே—பூதப்
பிறப்பொக்கு மெல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 98

சான்றாண்மை

பொங்கிக் கடல்வருநாள் போந்ததவத் தோரைமனு
வங்கத்திற் சேர்த்தான் வடமலையே—செங்கதிர்போய்
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். 99

பண்புடைமை

பாரி நிலைகுலையா வண்ணம் பணிந்திருந்தான்
வாரியை உண்டோன் வடமலையே—தேருங்கால்
பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன். 100

நன்றியில் செல்வம்

ஆதுலர்கட் கீயாதே ஈட்டினுன் கஞ்சனென்போன்
மாதனத்தைக் காவை வடமலையே—பூதலத்தே
நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 101

நாணுடைமை

காந்தாரி மைந்தன் கலந்தழித்தான் கற்புடையாள்
மாந்தளி ராடை வடமலையே—தேர்ந்து
பிறர்நாணத் தக்கது தான்நாணு னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து. 102

குடிசெயல் வகை

அத்திகன் சுற்றத்தை ஆக்க நினைத்தபடி
வைத்தது தெய்வம் வடமலையே—நித்தம்
குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 103

உழவு

நெல்வித்து வேளாளர்க் கீந்தான் அரனுமைபால்
மல்கத் தருமம் வடமலையே—சொல்லின்
உழவினர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. 104

நல்குரவு

நண்பு துரோணன் உரைப்ப நகைத்திகழ்ந்தான்
மண்புரக்கும் வேந்தன் வடமலையே—பண்புசெறி
நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 105

இரவு

கன்னன் கொடையால் மகிழ்ந்துகதிர் வேலிமையோர்
மன்னன் மகிழ்ந்தான் வடமலையே—தன்னை
இகழ்ந்தெள்ளா திவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. 106

இரவச்சம்

வேண்டியதென் னென்றுகும் வேளாளன் மாறுரையான்
மாண்டானைப் பாராய் வடமலையே—பூண்டு
கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர். 107

கயமை

திண்மை யிராவணன் தோள்நெரிந்த பின்சிவனார்
வண்மை புகழ்ந்தான் வடமலையே—நண்ணியே
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படுங் கீழ். 108

வாழி

விடமலையப் பண்டெதிர்த்த மால்போல
மேதினி புரந்துநன் மின்னார்
குடமலையப் பந்தாடு நெல்வேலிக்
கோவடி சூடிநாற் கோட்டுக்
கடமலையப் பண்ணவன் முகில்காத்த
காராளர் திலகனுங் காவை
வடமலையப்ப பிள்ளையன் பேரில்
வகுத்தஇந் நூலென்றும் வாழி!

வடமலை வெண்பா முற்றும்.

வடமலை வெண்பா

அரும்பதவுரை

நாமகள்

மனு - மனுச்சக்கரவர்த்தி. வள்ளுவர்பா - திருக்குறள். வெண்கவி, வெண்பா. தார் - மாலை. பூங்குழல் - அழகிய கூந்தல், வாணி - கலைமகள்.

1 பூமகன் - நான்முகன். புவனம் - உலகம். மாமகள் கோன் - திருமகள் கணவனாகிய திருமால், ஆதிபகவன் — கடவுள்.

2 இப்பாட்டில் விசுவாமித்திரர் நாயூனைக் களவுசெய்து தின்னத் தொடங்கிய கதை குறிக்கப்பட்டது. காதி புதல்வன் - விசுவாமித்திரர்.

3 இப்பாட்டில் வேள்விக் குதிரையைத் தேடி நிலத்தைத் தேடிக் கொண்டு சென்ற சகரர்பாதலத்தில் தவஞ் செய்திருந்த கபில முனியைக் கண்டு குதிரையைக் களவு செய்தவர் அவரே என்று அவரை வம்புக்கிழுக்க அதனால் வெகுண்ட கபிலர் வெகுளியோடு விழிக்க சகரர் அறுபதினாயிரவருஞ் சாம்பரான செய்தி இதில் குறிக்கப்பட்டது. சகரர்கள் பாதலஞ் சென்றபொழுது தோண்டியவிடமே சாகரமாயிற்று. மூண்டு - சினமூண்டு. வெகுளி - வெகுளியோடு.

4 இப்பாட்டில் மார்க்கண்டேயருடைய வரலாறு கூறப்பட்டது. அறத்தையியற்றி - அறத்தைச் செய்து. கூற்றை- நமனை, பொன்றுங்கால் - இறக்கும்போது.

இல்லறம்

5 மனுநீதி மன்னன் ஆறிலொரு கடமை கொண்டு அரசாட்சி செய்த கதை இதில் குறிக்கப்பட்டது. கூறு ஒன்று - ஆறுகூறில் ஒன்று. மாறுது - மறுக்காமல்.

6 கண்ணகியின் கட்டளைப்படி தீக்கடவுள் மதுரையை எரித்தழித்த செய்தி இதில் குறிக்கப்பட்டது. ஏவல் -

ஏவிய வேலை. கனல்கடவுள் - தீக்கடவுள். தக்க - தகுதியான.

7 பாண்டு மன்னன் நற்கதியடையுமாறு தருமர் வேள்வி செய்தமை இப்பாட்டில் குறிக்கப்பட்டது. ஆசனம்- சிம்மாசனமாகிய இருக்கை. பாண்டு - பாண்டு மன்னன். மைந்தன் - தருமன்.

8 இப்பாட்டில் தம்முடைய முதுகெலும்பைப் படைக் கலஞ் செய்யும் பொருட்டு இந்திரனுக்களித்த ததீசிமுனி வரின் செய்தி கூறப்பட்டது. தாம் உயிர் வாழ - தாங்கள் உயிர் பிழைத்திருக்க. இரந்தோர்க்கு - இரந்தவனாகிய இந் திரனுக்கு. மாமுனி - ததீசி முனிவர்.

9 இப்பாட்டில் அதியமான் ஔவையாருக்கு நெல்லிக் கனியளித்த வரலாறு கூறப்பட்டது. நெல்லியமுது—நெல்லிக் கனி. நெடுவேல் அதியன் - நீண்ட வேற்படையைஉடைய அதிகமான். மல்குபுகழ் - மிகுந்த புகழ். புறத்ததா-வீட்டின் புறத்தேயிருக்க.

10 கோலேந்துமாயன் -கண்ணன். இடையன். இப் பாட்டில் கூறப்பட்டுள்ள கதை விளங்கவில்லை; சிறுமையுள் நீங்கிய - பிறருக்குத் துன்பம் விளைக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய. இம்மை - இப்பிறப்பு.

11 இப்பாட்டில் இராமபிரான் சேதுபந்தனஞ் செய்த பொழுது அணில் ஒன்று உதவி செய்யச் சென்று மண்மேற் புரண்டு அணையில் போய் மண்ணை உதறிய கதை சுட்டப் பட்டது. நேசத்து அணில் - அன்புடைய அணில், வான் கொடுத்தான் - தேவலோகங் கொடுத்தான். வாசத்துழா யான் - மணம் பொருந்திய துளப மாலையை அணிந்த திருமால். வரைத்து அன்று - எல்லையை உடையதன்று, சால்பு - மேன்மை.

12 தருமர் புருடா மிருகத்திற்கும் பீமனுக்கும் ஏற் பட்ட வழக்கில் புருடா மிருகத்திற்குப் பாதியுடலைக் கொடுத்துவிடுமாறு முடிவு கூறிய கதை இப்பாட்டில் கூறப் பட்டது. ஓர் மன்னன் - தருமன், கேடு - அழிவு, பெருக் கம் - செல்வம். கோடாமை -கோணுதிருத்தல், அணி-அழகு.

13 இப்பாட்டில் சிசுபாலன் கண்ணபிரானை வேள்வி யில் இகழ்ந்து பேசி மாண்ட கதை உரைக்கப்பட்டது. மாயோன் - திருமால், ஆயுங்கால் - ஆராய்ந்து பார்க்கும்

பொழுது. யா - காக்க வேண்டிய எவற்றையும், சோகாப்பர் - துன்பப்படுவர், சொல்லிழுக்குப்பட்டு - சொற் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டு.

14 இப்பாட்டில் வேளாளன் நாரதனுன கதையும் நமன் விதுரனுன கதையுங் கூறப்பட்டன. வாள்விதுரன் - வாட்படையையுடைய விதுரன். குடிமை - உயர்ந்த குடியில் பிறந்த தன்மை. இழுக்கம் - நல்லொழுக்கத்தில் தவறுதல்.

15 கௌதமரிடத்தில் இந்திரன் வசவுரை பெற்ற செய்தி இப்பாட்டில் கூறப்பட்டது. கோதமன் - கௌதம முனிவர். மாதை - அகலிகையை. எனைத்துணையர்ஆயினும் - எவ்வளவு சிறப்புடையவராகவிருந்தாலும். தேரான் - ஆராய்ந்து பார்க்காதவனுய்.

16 இப்பாட்டில் துரியோதனன் விதுரனை விலை மகளுடைய மகன் என்று இழித்துரைத்த செய்தி கூறப்பட்டது. தீர்த்தன் விதுரன் - தீர்த்தமாடச் சென்ற விதுரன், பணிக்கொடியோன் - அரவக் கொடியையுடைய துரியோதனன். ஒறுத்தாரை - தண்டித்தவர்களை. ஒன்ருக - ஒரு பொருளாக. வையார் - மதிக்கமாட்டார்கள். பொன்போல் பொதிந்து - பொன்னைப் பாற் பாதுகாத்து.

17 இப்பாட்டில் மகாபலி தானங் கொடுத்ததைத் தடுத்த வெள்ளி விழியிழந்த கதை கூறப்பட்டது. ஈவோனை - கொடுப்பவனுகிய மகாபலியை. வெள்ளி - சுக்கிரன். அழுக்காறு - பொருமை.

18 இப்பாட்டில் குண்டலத்தை விரும்பிய பாம்பு தன் குலத்தைத் தீயிடை வீழ்த்திய கதை கூறப்பட்டது. மண்டலி - பாம்பு. நடுவு - நடுவு நிலைமை. வெஃகில் - விரும்பினுல். பொன்றி - அழிந்து.

19 கூற்றம் - நமன், அறநூல் உரைத்தோன் - தருமநூல் கூறியவன். மாற்றம் - சொல். புறஞ் சொல்லுதல் - காணுதவிடத்தில் இகழ்ந்துரைத்தல். புன்மை - இழிகுணம்.

20 சாபாலி - சாபாலி என்பவன். தயரதராமன் - இரகுராமன். மாபார் அறிய - பெரிய நிலவுலகிலுள்ளார் அறியுமாறு. பல்லார் - பலர். முனிய - சினமடைய. எல்லாரும் - எல்லாரானும். எள்ளப்படும் - இகழப்படும்.

21 இப்பாட்டில் சிந்து நாட்டரசன் தன் மகனைக் கொல்வோன் சாவ வேண்டுமென்று தவஞ்செய்து தானே மாண்ட கதை உரைக்கப்பட்டது. மாயாத்தவம் - வஞ்சனை பொருந்திய தவம், அறம் - அறக்கடவுள்.

22 இப்பாட்டில் இல்லையென்று கூற நாணிப் பாம்புப் புற்றில் கையிட்ட காளத்தி முதலியார் செய்தி கூறப்பட்டது. அரவில் - பாம்புப் புற்றில். வல்லே - விரைவாக. தொண்டை நாடன் - காளத்தி முதலியார். ஒத்தது - உலகப் போக்கிற்கு ஒத்தது.

23 ஒளிர்கடகம் - விளங்குகின்ற காப்பு. பாத்தூண் - பகுத்துண்ணப்பட வேண்டிய உணவு. மரீயவன் - பொருந்தியவன். தீப்பிணி - தீயநோய்.

24 இப்பாட்டில் பாரி கதையும் கன்னன் கவசகுண்டலமளித்த செய்தியுங் கூறப்பட்டன. மெய்க்கவசம் - உடம்பிலணியும் பாதுகாப்புக் கருவி. மாரிநிகர்கன்னன் - மழையைப்போல் கொடை வழங்குங் கன்னன், நத்தம்போல் கேடு - அழிவதைப் போன்று வளரும் நிலைமை.

25 நாயையும் விண்ணுலகிற்கழைத்துச் சென்ற தருமர் கதை இப்பாட்டில் உரைக்கப்பட்டது. அமரர்நாடு—தேவர் உலகம். வாய்மைத் தருமன் - உண்மை பேசுதலையுடைய தருமபுத்திரன், இன்னுவுலகம் – நிரயம்.

26 இப்பாட்டில் வேள்வியில் கொலை நேர்தலைக் கருதி வேள்வி செய்தலையொழித்த நந்திதேவன் கதை கூறப்பட்டது. சூள் - உறுதிமொழி, அவிசொரிந்து - தேவருணவைப் பெய்து. வேட்டல் - வேள்வி செய்தல். செகுத்து-கொன்று.

27 இப்பாட்டில் திரிசங்கு மன்னனைச் சுவர்க்கத்திற்கனுப்பிய கதை கூறப்பட்டது. முச்சங்கு - திரிசங்கு, வான் புகுத்தி – விண்ணுலகிற் செலுத்தி, ஐம்மீன்முறை தவிர்த்து-விண்மீன்களின் செலவை மாற்றி. முனிவன் - விசுவாமித்திரன். ஒன்னார்த்தெறல் - பகைவர்களையழித்தல். உவந்தாரையாக்கல் - வேண்டியவர்களை வாழச் செய்தல்.

28 இப்பாட்டில் கங்கையின் உறுப்பை நோக்கி வசவுரை பெற்ற வருணன் கதை கூறப்பட்டது. மாபிடக்கு மன்னன் - வருணன். தாபதர் - முனிவர். வானுயர்தோற்றம் - மிகச்சிறந்த காட்சி.

29 இப்பாட்டில் காமதேனுவைக் களவு செய்யச் சென்ற வசுக்களின் கதை கூறப்பட்டது. தேனு - காம தேனு. வசுக்கள் - அட்டவசுக்கள். மானிடராஞர் - மனிதப் பிறப்பையடைந்தவர்கள். உள்ளல் - எண்ணல். கள்வேம் - களவுசெய்து கொள்வோம்.

30 கள்ளர்கட்கு உண்மையுரைத்து நிரயம் புகுந்த முனிவன் கதை இப்பாட்டில் கூறப்பட்டது. ஆறலைப்போர்-வழிச்செல்வோரை வருத்திப் பொருள் கவர்வோர். ஆழ் நரகம் - தீயநரகம். பொய்த்தபின் - பொய்யாகப் போன பிறகு.

31 ஆழிப்படை முனிவரைத் துரத்திச் சென்று வருத்திய கதை இப்பாட்டிற் கூறப்பட்டது. மானமுனி – பெருமையை உடைய முனிவர். செல்லிடம் - சினம் செல்லக்கூடிய இடம். அல்லிடம் - செல்லாத இடம்.

32 பாண்டவர்களிடம் தன் பெருமையைக் காட்டச் சென்ற துரியோதனனைக் கந்திருவன் கட்டிக் கொண்டு சென்ற - செய்தி இப்பாட்டிற் கூறப்பட்டது. கவுரவன் - துரியோதனன். பிணித்தான் - கட்டினன். இன்ன-இனிமை யல்லாதன.

33 இப்பாட்டில் தண்டகாரணிய முனிவர்கள் மாண்ட கதை கூறப்பட்டது. தண்டகம் - தண்டகாரணியம். ஏமம் சால் - பாதுகாப்புப் பொருந்திய. பிறிதின்உயிர் - மற்றொன் றின் உயிர்.

34 இப்பாட்டில் நகுடன் பாம்பான கதை கூறப்பட்டது. அந்தமுற்று - இறுதியை அடைந்து. அயிராணி-இந்தி ராணி. ஒருபொழுதும் - சிறிது நேரங்கூட. கருதுப-எண்ணு வன.

35 மானை வளர்த்து அந்த வாசனையால் மான் பிறப் பையெய்திய முனிவர் கதை இப்பாட்டிற் கூறப்பட்டது. ஞானமுனி – சடபரதர். கலை - மான். இயல்பு - இயற்கை. மயல் - மயக்கம்.

36 தண்டு - படை. சுற்றவான் - உறவினர். எத்தன் மைத்தாயினும்-எத்தன்மையோடு கூடியதாகவிருந்தாலும்.

37 இப்பாட்டில் சுகர்வீடு பெற்ற கதை கூறப்பட்டது. தந்தை - வியாசர். தனிவீடு - ஒப்பற்ற மோட்சம். ஆரா - அமையாத. இயற்கை - தன்மையினையுடைய, பேரா – மாறாத.

38 இப்பாட்டில் தக்கன் கதையும் வீமன் கதையுங் கூறப்பட்டன. விடமேறி - துரியோதனனால் வஞ்சனையாக ஊட்டப்பெற்ற நஞ்சுஏறி. உய்ந்தான் - பிழைத்தான். ஊழ் வகையால் - நல்வினை தீவினைகளின் மாறுபாடுகளால்.

39 மகனையிழந்த பார்ப்பான் அருச்சுனனை வைதகதை இப்பாட்டிற் கூறப்பட்டது. பார்த்தன் - அருச்சுனன். வெகுண்டுரைத்த - சினந்து கூறிய. செவிகைப்ப - காது வெறுக்க. கவிகை - குடை.

40 இப்பாட்டில் அனுமான் கதிரவனிடம் கல்வி கற்ற கதை கூறப்பட்டது. சொல்லும்நூல் - கதிரவன் போதித்த நூல்களை. வாரிகடந்தோன் - கடலைத்தாண்டி இலங்கைக்குச் சென்ற அனுமான்.

41 இப்பாட்டில் ஊன்வணிகன் முனிவனுக்கு மெய் யறிவு கூறிய செய்தி குறிப்பிடப்பட்டது. மாண - மாட்சி மைப்பட. மேற்பிறந்தாராயினும் - உயர்ந்த குலத்திற் பிறந்தவர்களாக இருந்தாலும். கற்றார் அனைத்து - கல்வி கற்றவர்களைப்போல். பாடுஇலர் - பெருமையில்லாதவர்கள்.

42 இப்பாட்டில் வேடன் வான்மீகியான கதை கூறப் பட்டது. சங்கர் - சங்கர் என்னும் முனிவர். ஈனன்-வேடன். வான்மீகியானான் - வேடன் மெய்யறிவுரை பெற்றுப் புற்று மூடுமாறு தவஞ் செய்தபடியால் வான்மீகி என்னும் முனிவர் ஆனான். எனைத்தானும் - எவ்வளவு சிறிதானாலும். ஆன்ற- சிறந்த.

43 விண்ணுலகில் அருச்சுனன் ஊர்வசியை வெறுத்த கதை இப்பாட்டிற் கூறப்பட்டது. வேண்டும் - தன்னை விரும்பும். உறுவசியாள் - ஊர்வசி. மைக்குழல் - முகில் போன்ற கூந்தல். தீதுஒரீஇ - தீமையிலிருந்து நீக்கி. உய்ப் பது - செலுத்துவது.

44 இப்பாட்டில் பொற்கைப் பாண்டியனுடைய கதை கூறப்பட்டது. ஆறுஅன்றுஎன்று - கதவைத் தட்டியது நல்ல நெறி அன்று என்று. கதவு தொட்டகரம் - கதவைத் தட் டிய கை. மாறன் - பாண்டியன். இறைக்கு - அரசனுக்கு.

45 இந்திரனுக்கு ஏற்பட்ட பழியை அவனுடைய அமைச்சன் நீக்கிய கதை இப்பாட்டிற் கூறப்பட்டது. இகல் அரசு - வெற்றியுள்ள அரசாட்சி. உற்றநோய் - உண்டாகிய துன்பம். உறுமை - மேலே துன்பம் உண்டாகாதவாறு. பெற் றியார் - தன்மையுடையவர்கள்.

46 இப்பாட்டில் கைகேசி மனந்திரிந்த கதை கூறப்பட்டது. கூனி - முதுகில் கூனையுடைய மந்தரை. மானிலங் கொண்டாள் - அரசாட்சியைக் கைப்பற்றினுள். அற்று - அத்தன்மைத்து.

47 துரியோதனன் நாடாள விரும்பி மாண்டொழிந்த கதை இப்பாட்டில் கூறப்பட்டது. விண் - விண்ணுலகம். நாகக் கொடியோன் - பாம்புக் கொடியை உடைய துரியோதனன். எண்கொண்டு - எண்ணங்கொண்டு. ஆக்கம் - பொருள் வளர்ச்சி. ஊக்கார் - மேற்கொண்டு செய்யார்.

48 பீஷ்மரோடு அரசர்கள் போரிடத் தொடங்கித் தோல்வியடைந்த கதை இப்பாட்டில் கூறப்பட்டது. காங்கையன் - பீஷ்மர். காசிநகரத்து - காசி நகரத்தில். உடைந்தார் - தோற்ருர். தம்வலி - தம்முடைய ஆற்றல். ஊக்கி - முயன்று. இடைக்கண் - இடையே. முரிந்தார் - தோற்றவர்.

49 இப்பாட்டில் பாண்டவர்கள் கீசகனைக் கொல்லச் சமயம் பார்த்திருந்த கதை கூறப்பட்டது. கேளாது - ஏன் இவ்வாறு செய்தாய் என்று கேட்காமல். மாசிலா மன்னர் - குற்றமற்ற பாண்டவர்கள். பொள்ளென - திடீரென்று. உள் வேர்ப்பர் - மனத்திலே சினங்கொண்டிருப்பர்.

50 மூவேந்தர் பாரியை வெல்ல முடியாத செய்தி இப் பாட்டில் கூறப்பட்டது. மூவேந்தர் - சேர, சோழ, பாண்டியர். முற்றியும் - கோட்டையை முற்றுகை செய்தும். மாவேழம் ஊர்ந்து - பெரிய யானைமீது சென்று. செல்லிடம்- நன்கு போர் செய்யக்கூடிய இடம்.

51 இப்பாட்டில் பொற்கொல்லன் சொல்லைக் கேட்டுக் கோவலனைக் கொல்வித்த பாண்டியன் செய்தி கூறப்பட்டது. பொற்கொல்லன்-பொன்னணி செய்யும் தட்டான். கேளிர்- உறவினர். பொன்றினுன் - இறந்தான். மற்போர்வழுதி - மற்போர் செய்தலையுடைய பாண்டியன். தேரான் - ஆராயாதவனுய். தீராவிடும்பை-எப்பொழுதும் நீங்காததுன்பம்.

52 இப்பாட்டில் கட்டியங்காரன் சச்சந்தனை வஞ்சித்து நாட்டைக் கவர்ந்து கொண்ட கதை கூறப்பட்டது. அமைச்சன் - கட்டியங்காரன். எனைவகையால் - எந்தவிதத்தினுல். வினைவகையால் - காரியமாறுபட்டால்.

53 இப்பாட்டில் யயாதி கதை கூறப்பட்டது. வான் இழுக்கி - வானுலகத்திலிருந்து வழுக்கி. பற்றறற்கண்ணும்-

பொருளில்லாத பொழுதும். பழைமை - பழைய உறவுத் மையை. பாராட்டுதல் - சிறப்புறுத்தல்.

54 மறதியினால் கொடையை மாறுபாடாக வழங்கிய வன் ஓந்தியாய்ப் பிறந்த கதை இப்பாட்டில் கூறப்பட்டது. அடவி - காடு. ஓந்தி - பச்சோந்தி. மாணிபன் - மாணிபன் என்பவன். அரண் - பாதுகாப்பான இடம். பொச்சாப் புடையார் - மறதியுடையவர்கள். நன்கு - நன்மை.

55 இராமபிரான் தவஞ்செய்த சம்புகன் என்பவனைக் கொலை செய்த கதை இப்பாட்டில் கூறப்பட்டது. தனிக் கோல் வளைவு - ஒப்பற்ற அரசாட்சியின் கோணல். வம்பார் துழாயன் - மணம் பொருந்திய துளப மாலையை அணிந்த திருமால். வடுவன்று - குற்றமன்று.

56 இப்பாட்டில் ஏனன் என்பவனுடைய அரசாட்சிச் சிறப்புக் கூறப்பட்டது. இரட்டி - இரண்டு மடங்கு. முடி வைத்து - முடிசூடி. முறை - அரசாட்சியை நேரியதாக.

57 இப்பாட்டில் இராவணனுடைய கதை இயம்பப் பட்டது. பாழாய் ஒழிந்தது - வீணாகப்போயிற்று. இறை கடியன — அரசன் பொல்லாதவன். இன்னாச்சொல் — துன்ப மொழி. உறைகடுகி - வாணாள்கெட்டு. ஒல்லை — விரைவாக.

58 இப்பாட்டில் சயிந்தவன் துரோபதையைக் கவர்ந்து சென்ற கதை கூறப்பட்டது. பாரியை - திரௌபதையை அருளின்வாரி - அருட்கடலாகிய தருமர். ஒறுத்தாற்றும் - தண்டித்தடக்க வேண்டிய. கண்ணோடி - அருள்செய்து. பொறுத்தாற்றும் - பொறுத்துக் கொள்ளும்.

59 இப்பாட்டில் இராமபிரான் சீதாப்பிராட்டியை இகழ்ந்துரைத்த கதை கூறப்பட்டது. ஒள்ளொளியாள் - பேரழகையுடையவள். ஒற்றர் - மறைந்து சென்று செய்தி யறிவோர். உரைசான்ற - புகழமைந்த. தெற்றெனக - தெளிய வேண்டும்.

60 இப்பாட்டில் துருவனுடைய கதை கூறப்பட்டது. ஊக்கமுடைமை - முயற்சியோடுகூடிய தன்மை. உயர் உலகம் - உயர்ந்த உலகம். வெள்ளத்தனைய - தண்ணீரினள வினதாம்.

61 இதில் அருச்சுனனுடைய கதை கூறப்பட்டது. கண்துயிலுங் காலையிலும் - உறங்கும்பொழுதும். விசயன் - அருச்சுனன். மண்டலம் — உலகம். மடி - சோம்பல். அடி

யளந்தான் - திருமால். தாயதுஎல்லாம் - தாண்டியளந்த உலகங்கள் எல்லாவற்றையும். ஒருங்கு - ஒருசேர.

62 இப்பாட்டில் சோழன் கதை கூறப்பட்டது. கூற்றுக்கு - நமனுக்கு. குடிமடிமை - குடிமையின் கீழ்மை. ஊற்றம் - உறுதியுடைமை. உப்பக்கம் – பின்பக்கம். உலேவின்றி- தளர்ச்சியில்லாமல். உஞற்றுபவர் - முயற்சி செய்பவர்.

63 இப்பாட்டில் பூருவின் கதை கூறப்பட்டது. சூழ்துயர் - சூழுகின்ற துன்பம். ஊழால் - ஊழ்வினையால். இடுக்கண் – துன்பம். நகுக - நகைக்க.

64 இப்பாட்டில் யூகி உதயணனுடைய சிறை நீக்கிய செய்தி கூறப்பட்டது. யூகி - உதயணனுடைய அமைச்சன். மாகீர்த்தி - பெரும்புகழ். நூலோடு - நூலறிவோடு.

65 இப்பாட்டில் அருச்சுனன் தருமனிடஞ் சினங்கொண்ட கதை கூறப்பட்டது. முன்னோனை - தருமனை. மல்லடர்த்தோன் சொல்லால் - மல்லர்களை வென்றவனுடைய சொற்களால். பிணிக்குந்தகையவாய் -ப ற்றிக்கொள்ளுந்தன்மையோடு கூடியதாய். வேட்ப - விரும்ப.

66 இப்பாட்டில் வாதாபியின் பொருளழிந்த கதை கூறப்பட்டது. நீதி கெடச் செய்த - மறமுறையால் தேடிய. துயராடும் - துன்பம்மிகும். சலத்தால் - தீய வழியால். பொருள் செய்து - பொருளைத் தேடி. ஏமார்த்தல் - காப்பாற்றுதல். இரீயற்று - வைத்ததைப் போன்றது.

67 இப்பாட்டில் பகீரதன் கங்கையழைத்த கதை கூறப்பட்டது. மந்தாகினி - கங்கை.

68 இப்பாட்டில் சராசந்தனை வென்ற கதை கூறப்பட்டது. சராசந்தன் - சரையென்னும் அரக்கியால் ஒன்றுபடுத்தப்பட்டவன். வீழ்ந்தான் - வீழ்த்தி வென்றான். படுபயன் - உண்டாகும் பயன்.

69 இப்பாட்டில் அநுமான் தூது சென்று இராவணனிடம் அஞ்சாமல் செய்தி சொன்னது கூறப்பட்டது, அரக்கன் - இராவணன். மாருதி - மாருதத்தின் (காற்று) மகன்; அநுமான். இறுதிபயப்பினும் - அழிவுண்டாவதாக இருந்தாலும். எஞ்சாது - சிறிதும் குறைவில்லாமல். இறைவன் - அரசன்.

70 இப்பாட்டில் சத்தியகிர்த்தியின் அரசாட்சிச்செய்தி கூறப்பட்டது. புரந்தான் . காப்பாற்றினன். இகல்வேந்தர்- ஆற்றல்மிகுந்த அரசர்கள்.

71 இப்பாட்டில் சகுந்தலையை அரசன் மனைவியென்று அறிந்த கதை கூறப்பட்டது. அரசன்பாரி - அரசன்மனைவி. ஐயப்படாது - ஐயமில்லாமல். அகத்தது - உள்ளத்திலுள்ளது. உணர்வானை : அறிகின்றவனை,

72 இப்பாட்டில் சங்கத்தார் திருவள்ளுவ மாலைபாடிய செய்தி கூறப்பட்டது, சீர் - திருக்குறளின் சிறப்பு. ஒள்ளொளி - உள்விளக்கம். சொல்தெரிதல் வல்லார் - சொல்வதை அறிந்துகொள்ளும் வல்லமையுடையவர்கள்.

73 இப்பாட்டில் சமணர்களுடைய செய்தி கூறப்பட்டது. பாய்மூடினர் - பாயால் உடலை மூடிக்கொண்டவர்கள், வாய்மூடி நின்றார் : வாயடங்கி நின்றார்கள். பல்லவை கற்றும் - பல நூல்களைக் கற்றிருந்த போதினும். பயமிலர் - பயனற்றவர். நன்குசெல - நன்றாக ஏற்குமாறு,

74 இப்பாட்டில் ஔவையார் தொண்டை நாட்டைப் புகழ்ந்து பாடிய செய்தி கூறப்பட்டது. ஔவை - ஔவையார். வான்கரும்பு - சிறந்த கரும்பைப் போன்றது. தள்ளா விளையுள் - குறைவில்லாத விளைச்சல்.

75 இப்பாட்டில் சாலுவ மன்னன் கதை கூறப்பட்டது. சூழ்படையால் - தன்னைச் சூழ்ந்துள்ள படையால், துவரை- கண்ணனுண்ட துவாரகை. முற்றியும் - சூழ்ந்தும். அறைப்படுத்தல் - வஞ்சனை செய்தல்.

76 இப்பாட்டில் அருச்சுனன் தவஞ்செய்த கதை கூறப்பட்டது. பொருளடைந்தான் - பாசுபதக் கணை பெற்றான். மங்கைபங்கன் - சிவபிரான், ஒண்பொருள் — புகழ் பொருந்திய பொருள். காழ்ப்ப - மிகுதியாக, இயற்றியார் - தேடியவர். எண்பொருள் - எண்ணத்தக்க அறமும் இன்பமும். ஒருங்கு - ஒருங்கே கிடைக்கும்.

77 இப்பாட்டில் இராமாயணப் போரில் மூலபலப் படையழிந்த கதை கூறப்படுகிறது. மூலபலம் - இராவணனுக்கு மூலபலமாக இருந்த படை, மூரிவில் - பெருமை பொருந்திய வில். மால் ஒருவன் - திருமாலின் கூறாகத் தோன்றிய இராமனாகிய ஒருவன். உவரி - கடல். உயிர்ப்ப - மூச்சுவிட.

78 இப்பாட்டில் தருமனுயிரைக் காத்த கதை கூறப் பட்டது. வையார்வேல் – கூர்மை பொருந்திய வேல். தறுகண் – வீரத்தன்மை. ஊராண்மை - உதவி செய்தல்.

79 இப்பாட்டில் சீவகன் உயிர்பிழைத்த கதை கூறப் பட்டது- தோழமை - நட்பு. உடுக்கை - ஆடை. இடுக் கண் - துன்பம். களைவது - போக்குவது.

80 இப்பாட்டில் இராவணன் பொருட்டு உயிர்விட்ட மாரீசன் கதை கூறப்பட்டது. போரார் - போர்த்தன்மை பொருந்திய. மாரீசன் - அரக்கர்களில் ஒருவன். ஆய்ந் தாய்ந்து - நன்ருக ஆராய்ந்து. கேண்மை - நட்பு. கடை முறை - இறுதியில். தான்சாம்துயர் - தான் இறக்கத்தக்க துன்பம்.

81 இப்பாட்டில் பிழை பொறுத்த கதைகள் கூறப் பட்டன. ஆற்றிஞன் - பொறுத்தான். மாற்றிஞன் - மாறச் செய்தான். பேதைமை - அறிவின்மை. பெருங் கிழமை - மிகுந்த உரிமை. நோதக்க - வருந்தத்தக்கவை களை. நட்டார் - நண்பர்.

82 இப்பாட்டில் வீமனுக்குத்துரியோதனன் நஞ்சளித்த கதை கூறப்பட்டது. நாகக்கொடியோன் - பாம்புக் கொடி யைஉடையவனுகிய துரியோதனன். இன்ஞது - துன்பந் தருவது.

83 இப்பாட்டில் முனிவர்கள் கோதமரை நம்பிய கதை கூறப்பட்டது. பொருள்கருதி · பொருளை விரும்பி. இனம் போன்று . இனத்தார்போற் காணப்பட்டு. கேண்மை - நட் புடைமை.

84 இப்பாட்டில் வாலி சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்து கொண்ட கதை கூறப்பட்டது. ஏலாதன - செய் யக்கூடாதவைகள். இளையோன்-சுக்கிரீவன். சீலங்கள் - நல் லொழுக்க முறைகள். பேதை - அறிவற்றவன்.

85 இதில் மகனை வெறுத்த மன்னன் கதை கூறப் பட்டது. சாற்றுமொழி - கூறுகிற சொற்கள். ஏவவும் செய்கலான் - ஏவினுலுஞ் செய்யமாட்டான். தான்தேருன்- தானும் அறியமாட்டான். .

86 இப்பாட்டில் வேள்வியைக் காத்த கதை கூறப்பட் டது: மாறுகோள் – மாறுபட்ட கோள்; மருத்தன் - காற்று. மகம் - வேள்வி. இகல்எதிர் - பகைக்கு எதிரே. மிகல் ஊக் கும் - வெல்லக்கருதும்.

87 இப்பாட்டில் தேவர்கோன் தேரோட்டி பகை வென்ற செய்தி கூறப்பட்டது. தேவர்கோன் - இந்திரன். பாகன் - செலுத்துபவன். செகுத்து - அழித்து. மாறுஏற்றல் - பகைவராதல். மேக - மேற்கொள்ளுக.

88 இப்பாட்டில் பரசுராமன் கதை கூறப்பட்டது. கொற்றவரை - அரசர்களை. வன்தோள் இராமன் - பரசுராமன். இளைதாக - இளமையுடையதாகவிருக்கும்போதே. காழ்ந்தவிடத்து - முற்றியபிறகு.

89 இப்பாட்டில் சல்லியன் சூழ்ச்சி சொல்லிய செய்தி கூறப்பட்டது. சல்லியன் - ஓர் அரசன். சாரதி - தேரோட்டி. வல்லன் மொழி - சூழ்ச்சிச் சொல். கேள் போல் பகைவர் - உறவினரைப்போன்ற பகைவர்கள்.

90 இப்பாட்டில் வசுவின் கதை கூறப்பட்டது. மாதவர்க்கு - முனிவர்கட்கு. மாதவன் - திருமால். இறந்தமைந்த - மிகச் சிறப்பாக அமைந்த. சிறந்தமைந்த - சிறப்பாகப் பொருந்திய.

91 இப்பாட்டில் மனைவிக்கு அஞ்சி அவளிடம் உளறிய ஒருவன் கதை கூறப்பட்டது. உன் மைந்தன் மனை - உன் மகனுடைய மனைவி. இமையாரின் - தேவர்களைப்போல். பாடு - பெருமை. அமையார்தோள் - மூங்கிலைப் போன்ற தோள்.

92 இப்பாட்டில் கோவலன் கதை கூறப்பட்டது கோதில் பெரும்பொருள் - குற்றமற்ற மிகுதியான பொருள். மாதவியால் - மணிமேகலையின் தாயாகிய மாதவியால். விழையார்-விரும்பமாட்டார். ஆய்தொடியார்-ஆராய்ந்து செய்யப்பட்ட வளையல்களையணிந்தவர்கள். இழுக்குத்தரும்-குற்றத்தைக் கொடுக்கும்.

93 இப்பாட்டில் வெள்ளி கள் குடித்த கதை கூறப்பட்டது. காணாது – பிறர் அறியாமல். கையறியாமை - செய்வதறியாமை: மெய்யறியாமை - உண்மையை உணராத் தன்மை.

94 இப்பாட்டில் நளன் கதைகூறப்பட்டது. வல்-சூது. சிறுமை - கீழ்மை. ஒன்று இல் . வேறு ஒன்றும் இல்லை;

95 வேள்வியில் தீக்கடவுள் நெய்யை அளவுகடந்து. குடித்து நோயடைந்த செய்தி இப்பாட்டிற் கூறப்பட்டது.

முட்டாது-குறைவில்லாமல். வன்னி - தீக்கடவுள். தீயளவு - பசியளவு.

96 விழுக்குடி - சிறந்த குடி. மாசு - குற்றம். நாரின்மை - அன்பற்ற தன்மை.

97 இப்பாட்டில் பழையனூர் வேளாளர் எழுபதின்மர் தீப்பாய்ந்த கதை கூறப்பட்டது. எய்து பழிகண்டு - உண்டாகிய பழியைப் பார்த்துவிட்டு. வையம்புகழ - உலகத்தார் புகழ்ந்து பேச. உயிர் நீப்பர் - உயிரைப் போக்குவர்.

98-99 இப்பாட்டில் மனு சிலரைக் காத்த கதை கூறப்பட்டது, பொங்கிக் கடல்வரும் நாள் - ஊழிக்காலம், வங்கம் - மரக்கலம். ஆழி - கடல்.

100 அகத்தியர் நிலவுலகைச் சரிப்படுத்திய கதை இப்பாட்டில் கூறப்பட்டது. பார் - உலகம், வாரியை உண்டோன் - அகத்தியர். பண்புடையார் - நல்லியல்புடையவர்கள், மண்புக்கு -நிலத்திற்சென்று.

101 ஆதுலர்கள் - இரந்தோர்கள். மாதனம் - மிகுந்த பொருள். நச்சப்படாதவன் - பிறரால் விரும்பப்படாதவன். நச்சுமரம் - நஞ்சு பொருந்திய மரம், பழுத்தற்று - பழுத்தாற் போன்றது.

102 இப்பாட்டில் துச்சாதனன் திரௌபதியின் ஆடையை உரிந்த கதை கூறப்பட்டது. காந்தாரிமைந்தன்- துச்சாதனன். அறம் நாணத்தக்கது - அறக்கடவுள் நாணத்தையடையும்படியான தன்மையுடையது.

103 இப்பாட்டில் அத்திகன் கதை கூறப்பட்டது, ஆக்க நினைத்தபடி - நல்நிலையில் வைக்கவேண்டுமென்று எண்ணியபடி. குடிசெய்வல் - குடும்ப நிலையை ஓங்கச் செய்வேன். மடிதற்று - ஆடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு.

104 அரன் - சிவபெருமான். மல்க - மிகுதிப்பட, உழவினர் - உழவுத் தொழிலையுடையவர்கள். கைமடங்கின்- கைத்தொழில் செய்யாமலிருந்தால். விழைவதூஉம் - விரும்புவதையும்.

105 இப்பாட்டிலும் பாஞ்சாலன் துரோணரை இழித்துரைத்த செய்தி உரைக்கப்பட்டது. நண்பு - பழைய

நட்புத் தன்மையை. மண்புரக்கும் வேந்தன் - பாஞ்சாலன். நல்கூர்ந்தார் - வறுமையுடையவர்கள்.

106 கன்னன் கொடைக்கு இந்திரன் மகிழ்ந்த செய்தி இப்பாட்டில் உரைக்கப்பட்டது. இமையோர் மன்னன் - தேவர்கோன். இகழ்ந்து எள்ளாது - இகழ்ந்து நகையாமல். உள்ளுள் உவப்பது - உள்ளே மகிழ்வது.

107 மாறுரையான் - மறுத்துக் கூறுன். மாண்டானை- இறந்தவனை, கரப்பவர்க்கு - ஒளிப்பவர்க்கு. சொல்லாட - சொல்லுகின்ற அளவிலேயே.

108 இராவணன் திருக்கைலையில் தோள்நெரிபட்ட கதை இப்பாட்டில் உரைக்கப்பட்டது. திண்மை இராவணன் - வலிமையுடைய இராவணன். வண்மை- மேலாகிய தன்மை. சொல்ல - வாயினுற் கூற. கொல்ல - வருத்த. கீழ் - கீழ்மக்கள்.

———

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்: செய்யுளெண்]

வடமலை வெண்பா

பொதுமறைச் சிறப்பு

வள்ளுவனுர் வாய்மொழியால்
    வையமுய்யும் மாண்புன்னித்
தெள்ளு தமிழ்ப்புலவோர்
    சேர்த்தமைத்த - உள்ளுகுறள்
வெண்பாநூற் கெல்லையில்லை
    வேட்டு நனிபயில்வார்
பண்பட்டால் வாழ்வர்பல் லூழ்.